Register No. [ | | | | | | | ]

**FQD** **3639-17**

(For the candidates admitted from 2009–2010 onwards)

B.A.,B.L./B.A.,LL.B. DEGREE EXAMINATIONS,
NOVEMBER 2017.

(Five Years Regular Course)

Second Year — Third Semester

LAW OF CONTRACTS — I

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. What are the essentials of a valid contract? Explain them in detail.

   ஒரு செல்லத்தகு ஒப்பந்தத்தின் அடிப்படைக் கூறுகள் யாவை? அவற்றை விரிவாக விவரிக்கவும்.

2. Discuss the requisites of a valid offer.

   ஒரு செல்லத்தக்க முனைவின் தேவையான கூறுகளை விவாதிக்கவும்.

https://www.tndaluonline.com

3. "Parties to a contract must be competent to contract" – Elucidate.

"ஒப்பந்தத் தரப்பாளர்கள் ஒப்பந்தம் செய்ய தகுதி படைத்தவர்களாக இருத்தல் வேண்டும்" – விளக்குக.

4. "No one shall enrich himself unjustly at the expense of another". To what extent does the Indian Contract Act give effect to this principle?

"ஒருவரது இழப்பினால், எந்த ஒரு நபரும் நியாயமற்ற ஆதாயங்களை அடையக் கூடாது" – இந்திய ஒப்பந்தச் சட்டம் எந்த அளவிற்கு இக்கோட்பாட்டினைச் செயல்படுத்துகிறது?

5. What is meant by specific performance? What are the circumstances in which specific performance can and cannot be granted?

குறித்த வகை நிறைவேற்றம் என்றால் என்ன? குறித்த வகை நிறைவேற்றம் வழங்கப்படக் கூடிய மற்றும் வழங்கப்பட முடியாத சூழ்நிலைகள் யாவை?

PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each :

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Consensus ad-idem.

கருத்தொருமை.

(b) Counter offer.

எதிர் முனைவு.



(c) Privity of contract.

ஒப்பந்தச் சார்புறவு.

(d) Coercion.

வலுக்கட்டாயம்.

(e) Mistake.

தவறு.

(f) Public Policy.

பொதுக் கொள்கை.

(g) Wagering agreements.

பகடைப்பணைய உடன்படிக்கைகள்.

(h) Nominal damages.

பெயரளவு இழப்பீடு.

(i) Rectification of instruments.

ஆவணங்களைத் திருத்துதல்.

(j) Preventive relief.

தடுப்பு நிவாரணம்.



https://www.tndaluonline.com

## PART C — (4 × 4 = 16 marks)

**Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.**

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. **'Ram' advertises that any one who finds his missing dog would be suitably rewarded. Without the knowledge of the advertisement 'Selvan' found and brought the dog to 'Ram'. 'Ram' refuses to reward 'Selvan'. Decide.**

ராம் என்பவர் காணாமல் போன தன் நாயை கண்டுபிடித்துத் தருபவருக்கு தக்க வெகுமதி வழங்குவதாக விளம்பரம் செய்தார். விளம்பரத்தினைப் பற்றி அறியாமல் செல்வன் என்பவர் ராமின் நாயைக் கண்டுபிடித்து அவரிடம் அழைத்து வந்தார். ராம் வெகுமதி வழங்க மறுத்தார். முடிவு காண்க.

8. **'B' the wife of 'A' left him because of his cruelty. 'A' persuaded his father-in-law to send her again to his home promising him that he will treat her properly. He also agreed that if he failed to do so, he shall pay a monthly maintenance and provide a separate dwelling house for her. On that promise she again joined with her husband but subsequently she was ill-treated by her husband and was driven out. Whether she can claim for maintenance and dwelling house? Discuss.**

'அ' என்பவரின் மனைவியான 'ஆ' என்பவர், தன்னுடைய கணவரின் கொடுமையால் அவரை விட்டு விலகிச் சென்றார். 'அ' தன்னுடைய மாமனாரிடம், தன் மனைவியை உடன் அனுப்பி வைக்குமாறு வற்புறுத்தினார். அவர் தான் தன் மனைவியை ஒழுங்காக நடத்துவதாக வாக்குறுதி அளித்தார். மேலும் தான் தன்னுடைய மனைவியை ஒழுங்காக நடத்துவதில் தவறும் பட்சத்தில் அவளுக்கு ஒரு வீடும், மாதப் பராமரிப்புத் தொகையும் தருவதாக ஒப்புக்கொண்டார். அந்த உறுதியின் பேரில் 'ஆ' தன் கணவனான 'அ'-வுடன் சேர்ந்து வாழ்ந்தார். ஆனால் மீண்டும் கணவரால் கொடுமைப் படுத்தப்பட்டு, வீட்டை விட்டு வெளியே அனுப்பப்பட்டார். 'ஆ' தன்னுடைய கணவரிடம் தனி வீடும், மாதப் பராமரிப்புத் தொகையும் கோர முடியுமா? விவாதிக்க.

9. **'A' an old illiterate woman who was deserted by her husband executed a gift deed in favour of her Advocate due to his compulsion. Whether it is a valid one? Discuss.**

'அ' என்ற வயதான படிப்பறிவில்லாத பெண் கணவனால் ஒதுக்கப்பட்டு தன்னுடைய வழக்கறிஞர் பெயரில் நன்கொடைப் பத்திரம் ஒன்றை அவரின் வலுக்கட்டாயத்தின் பெயரில் எழுதிக் கொடுத்தார். அது செல்லத் தகுந்ததா? விவாதிக்கவும்.

10. **'A' agrees to sell his horse to 'B', but unknown to both the parties, the horse died before the contract was entered. Whether the contract is valid?**

'அ' என்பவர் தன்னுடைய குதிரையை 'ஆ' என்பவருக்கு விற்க ஒப்புக் கொண்டார். ஆனால் அக்குதிரையானது இறந்தது பற்றித் தெரியாமல் இருவரும் ஒப்பந்தம் செய்கின்றனர். அந்த ஒப்பந்தம் செல்லத் தகுந்ததா?





https://www.tndaluonline.com

11. Raghu a tradesman sends some goods ordered by Ram. Raghu's servant delivers the goods by mistake at Ravi's house. Ravi used the goods. Can Raghu recover the price of goods from Ravi?

ராம் என்பவரின் கோரிக்கைப்படி ரகு என்ற வணிகர் சில பொருட்களை தன் பணியாளர் வாயிலாகக் கொடுத்து அனுப்புகிறார். ரகுவின் பணியாளர் தவறுதலாக ராமின் வீட்டிற்கு பதிலாக ரவியின் வீட்டிற்கு கொண்டு சேர்க்கிறார். ரவியும் அதைப் பயன்படுத்தி விடுகின்றார். ரகு. ரவியிடமிருந்து அதற்கான பணத்தைப் பெற இயலுமா?

12. A, a creditor accepts from B, a debtor, a sum of Rs. 10,000 in full satisfaction of the debt of Rs. 20,000. Later he sues B for the recovery of the balance of Rs. 10,000. Can A succeed?

கடனீந்த 'அ', கடனுற்ற 'ஆ'-விடமிருந்து ரூ. 10,000 பெற்றுக் கொண்டு, கடன் தொகையான ரூ. 20,000 முழுவதையும் பெற்றுவிட்டதாக ஒப்புக் கொள்கிறார். பின்னர் 'ஆ'-வின் மீது எஞ்சிய தொகை ரூ. 10,000க்கு வழக்கு தொடுக்கிறார். 'அ' வெற்றி பெற இயலுமா?



https://www.tndaluonline.com